**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**MCOP. 129/2022**

**CNR.No.TNCB19000**

Date: 29/08/2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுந்தரம் | **வயது** | 59 |
| **த/பெ** | கரிவரதன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | டீச்சர்ஸ்காலனி | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 29th August 2024.

ம.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கனவே எனது தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல்செய்துள்ளேன். தற்போது எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2020 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | | காயச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | | TN.40 T 4269 வாகனத்தின் மோட்டார் வாகன | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்வறிக்கை | | |
| 6 | 24.06.2020 | குற்ற அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | | மருத்துவ பில்கள் ( மொத்த தொகை ரூ.1,32,293/-) எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மருத்துவ பில்களின் முன் தொகையாக செலுத்திய தொகையையும் சேர்த்து சொல்லப்பட்டுள்ளதாகவும், வாகன போக்குவரத்து சம்பந்தமான தொகைகளையும் சேர்த்து சொல்லப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவித்ததன் பெயரில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது. | அசல் | ம.சா.ஆ.7 |
| 8 | | மருத்துவமனை சென்றதற்கான போக்குவரத்து பில்கள் ( Trip Sheet) எண்ணிக்கை - 17 | அசல் | ம.சா.ஆ.8 |
| 9. | | மேட்டுப்பாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் STC.613/2020 வழக்கின் தீர்ப்பு | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.9 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## குறுக்கு விசாரணை

நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து எந்த இடம் எந்த தேதியில் நடந்தது என்றால் வித்தியா விகாஸ் பள்ளி, கன்னார்பாளையம் 23.06.2020 தேதியில் நடந்தது. நான் TVS- 50 வாகனத்தில் வந்தேன். நான் Work Shop ல் இருந்து எடுத்து வந்தேன். ரோட்டை கடந்து 100 அடி தள்ளி வந்தேன். எனக்கு தமிழ் எழுத படிக்க

தெரியும். முதல் தகவல் அறிக்கையில் TVS -50 வாகனத்தில் ரோட்டின் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓட்டிக்கொண்டு ரோட்டின் பாதி அளவு கடந்து மேற்கே திரும்ப முயன்ற போது விபத்து நடந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்க்கவில்லை. நான் ரோட்டை கடக்கும் போதுதான் விபத்து ஏற்பட்டது என்றும், எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

விபத்தில் எனது வாகனம் சேதமானதா என்றால் இல்லை. எனது வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் எனது வாகனத்திற்கு FC முடிந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றும் அதற்கு அபராத தொகையும் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான் என்று சொல்லிவிட்டு ஓட்டுநர் உரிமம் இருந்ததாக சொல்கிறார்.

தற்போது நான் ஓட்டுநர் உரிமம் கொண்டுவரவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றும் அந்த இரண்டும் இல்லாமல் வாகனத்தை ஓட்டுவது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் விபத்து நடந்த இடம் ரோட்டின் மையத்தில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது அதனால் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ளபடி TN.40T 4269 என்ற வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.7 ஆனது மருத்துவ பில்கள் அதில் மொத்த தொகை ரூ.1,32,293/- என குறிப்பிடப்பட்டுள்ளதில் வரிசை எண்.1,6,13,25,27,30,35 ஆகிய வரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை முன்தொகையாக ரூ. 60,000/- செலுத்தப்பட்டுள்ளது என்றும் வரிசை எண்.39 ல் உள்ளது Return Bill ன் தொகை ரூ. 155/- மற்றும் வரிசை எண்.50 ல் இருந்து 66 வரை Trip Sheet ஆக ரூ.28,300/- தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இவை எல்லாம் போக அசல் பில் தொகை ரூ. 72,293/- மட்டுமே மருத்துவ செலவிற்காக எனக்கு கிடைக்கத்தக்கவை என்றால் சரியல்ல.

மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவமனையில் இருந்து

விடுவிப்பு சான்றிதழ் கொடுத்தார்கள் என்றும் நான் வேறு ஏதோ காப்பீட்டுநிறுவனத்தில் தாக்கல் செய்து தொகையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது போல் வெல்டராக பணிபுரிந்ததர்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முன்னர் எப்படி இயல்பாக வேலைக்கு சென்றேனோ அதேபோல் விபத்திற்கு பின்னிட்டும் நான் இயல்பாக வேலைக்கு செல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் அஜாக்கிரதையாக ரோட்டை குறுக்காக கடந்ததினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான இழப்பீடு பெற வேண்டி Trip Sheet ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மருத்து பில்களில் அதிகப்படியாக கூட்டி காண்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் எனறால் சரியல்ல. இந்த விபத்து முழுவதும் எனது கவனக் குறைவால் தான் நடந்தது என்றால் சரியல்ல.

விபத்து வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் தான் உரிய இழப்பீடு வழங்க கடமைப் பட்டவர் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி<br>என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.